www.padippakam.com

# காகம்

**Kakam**




”இந்தக்

குளிருக்குள்

எங்குதான் கால்வைக்கலாம்”

(12) December 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## முகம்



### மீண்டும் காகம் வலியுறுத்துகின்றது

...காகம் இதழ் 2ல் வெளிவந்த முகம்

இவள் எமது ஈழத்துச்சகோதரி.
யாழ். சென்றிருந்த ஒரு டனிஸ் பத்திரிகையாளரின் புகைப்படப்பெட்டிக்குள் அகப்பட்டு வந்து பின்னர் ஓவியர் செல்லமாறனால் ஓவியமானவள்.
இவள் வாழும் நெடுந்தொலைவு தாயகத்தை நாம் வந்தபோது உள்ளநிலையிலேயே இப்போதும் எண்ணிப்பார்க்கின்ற நிலையிலே நாம் உள்ளோம்.நவீனத்துவ தொலைத்தொடர்பு சாதனவீச்சையும் கடந்துதானோ எமது தாயகமும் உள்ளது என எண்ணுமளவுக்கு இந்தச்சின்ன உலகம் பேதங்களினால் பிரிந்துபோயிருக்கிறது. வரு ர்தம்தான்.
இவளை எங்களால் மறக்கமுடியாதிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கடிதங்களாலேயே பாலம் அமைத்துக்கொண்டும், ஒருவருக்கொருவர் பலதை மறைத்துக் கொண்டும்தான்.....எமது உறவுகளுடன் இந்தப் பாலம் அமைந்திருக்கின்றது. இந்தப் பொய்மைகள் தொடரவேண்டாம். தொடரவும் முடியாது.என்றோ எங்கோ சந்திக்கப்போகின்றவர்கள் நாம். 60களின் பின் எழுந்து மறைந்த அந்த வெளிநாட்டுத்தமிழர்கள் பற்றிய மாய எண்ண அலையில் சற்று மாற்றம் தெரிகிறது. இந்த உண்மை பலருக்கும் தெரிந்த ஒன்று, ஆகவே பொய்யான இடத்திலிருந்து விலகுவோம்.நாம் ஒன்றாக வாழவேண்டிய காலம் வரும்.அதை நிச்சயமாக நம்புவோம். இந்த உண்மையை நம்புவோமானால் பரஸ்பரம் எமது தாயகத்துடனான உறவுகளை ஆரோக்கியமானதாகவும், ஆழமானதாகவும் ஆக்கிக்கொள்வோம்.

புலம்பெயர்ந்து நாம் வாழும்நாடுகளில் பிறவற்றைத்தவிர பொருளாதாரத்தில் குறைவற்றநிலையில் வாழ்வதை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ளவேண்டுமானால் இன்று தாயகத்திலுள்ள பொருளாதாரத்தேவையினை சீர்செய்ய நாம் உதவுதல்வேண்டும்.

அத்தகைய உதவி என்பது பொருளாதார மேம்பாட்டுக்கான அன்றேல் வாழ்வியக்கத்திற்கான நீண்டகாலப்பார்வையுடையதான உதவியாக அமைதல்வேண்டும்.

இன்று சில நாடுகளில் இத்தகைய முன்னெடுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவை பாராட்டுக்குரியவை.

காலதாமமின்றி ஒவ்வொரு ஈழத்து பிரசையும் புலம்பெயர் நாடுகளில் இத்தகைய தூரநோக்குடைய சமூக, பொருளாதார உதவித்திட்டங்களை மேற்கொள்ள ஆவனசெய்தல்வேண்டும். இத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளும்போது காகம் தன்னாலான பங்களிப்பை செய்யும்.

ஈழத்துச்சிறுமி ஒருத்தி ஒரு அட்டைப் படத்துக்காக பிறந்தவளல்ல.

அவள் வாழவும் வேண்டும். ■

உள்ளே.........



| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 7 | மலர்தல்வாடல், தெரிதல் |
| 9 | சிறுகதை |
| 14 | வேதாளம் சொன்ன கதை |
| 16 | கவிதை |
| 17 | வழக்கு |
| 22 | தோப்புக்கரணங்கள் |
| 25 | போட்டி |
| 26 | போட்டி இல.ம்.3 முடிவு |



**காகக்கூட்டமும்**
**கருத்தரங்கமும்**

காகம் மாதஇதழ் ஒருவருடநிறைவை எட்டும் இச்சந்தர்ப்பத்தில் .......

காகம் பற்றிய கருத்தறியும் நிகழ்வாகவும், எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், அதேவேளை அண்மைக்கால கவனத்திற்குரிய விடையங்கள் தொடர்பாக ஒரு கருத்தரங்கமும் ஒழுங்குசெய்யப்படுகிறது. எதிர்வரும் 06 ம்திகதி தை மாதம் 1996 அன்று VIBORG நகரத்தில் மேற்ப்படி கருத்தரங்கமும் காகக்கூட்டமும் நடைபெறும்.

1996 தை மாத இதழில் மேலதிக விபரங்கள் வெளியாகும்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 31.12.1995 ற்குள் 42 28 90 12 அல்லது 86 40 38 05 அல்லது 86 64 51 98 தொலைபேசி இலக்கங்களில் உங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறது. தனிப்பட்ட அழைப்புக்கள்இல்லை.

காகம்



படிப்பகம்

www.padippakam.com

H.C.ANDERSENனின் கதை

தமிழில்: விழி

# இங்கிதமற்ற சிறுவன்

முன்னொரு காலத்தில் வயதான ஒரு கவிஞன் இருந்தான். வயதானாலும் மிகத்திறமையுள்ளவன். ஒருநாள் மாலைப்பொழுதொன்றில் அவன் வீட்டிலிருந்தபோது, வெளியே மிகப்பயங்கரமானதும் பயந்தருவதுமான காலநிலையாக இருந்தது. மழைபொழிந்து வெள்ளமடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கவிஞனோ குளிர் காயும் அடுப்பின்முன்னால், இதமான வெப்பத்தில், ஆறுதலாக இருந்துகொண்டிருந்தான். "இப்படியானகாலநிலைக்குள் வெளியே அகப்பட்டுக் கொண்ட பரிதாபத்திற்குரியவர்களுக்கு ஒரு காய்ந்த நூலிழைதானும் மிஞ்சாது" என்று அவன் சொல்லிக்கொண்டான்.

"கதவைத்திற நான் உள்ளே வரவேண்டும். நான் மிகவும் நனைந்துள்ளேன்.எனக்கு நன்றாகக்குளிராகவும் இருக்கிறது." என்று ஒரு சிறிய பையன் அழுதபடியே வெளியிலிருந்து கதவைத்தட்டினான். வெளியேயோ மழை நன்றாகப் பெய்துகொண்டிருந்தது. காற்றும் சுழன்றடித்து வீசி எல்லா ஜன்னல்களிலும் வந்தடித்தது. அந்த வயதான கவிஞன் எழுந்துசென்று கதவைத்திறந்தான். அங்கே ஒரு சிறியபையன் முற்றிலும் நனைந்தபடி நின்றுகொண்டிருந்தான். அவன் முழுக்கமுழுக்க நிர்வாணமாக இருந்தான். அவனது நீண்ட மஞ்சள் தலைமுடியிலிருந்து தண்ணீர் ஒழுகியது. குளிரினால் மிகவும் நடுங்கியவாறிருந்தான். அவன் வீட்டுக்குள் வராதிருந்தால் அந்தப்பயங்கரமான காலநிலையினால் இறந்துபோயிருக்கலாம்.

"நீ ஒரு பரிதாபத்துக்குரியவன்தான்," என்று அக்கவிஞன் சொல்லியவாறு அப்பையனின் கையைப்பிடித்து வீட்டினுள் அழைத்துச்சென்றான்.

" உன்னை விரைவில் வெப்பமாகச்செய்கிறேன். உனக்கு வைனும் அப்பிளும் தருகிறேன். நீ ஒரு அழகான நல்ல பையன்." என்று மேலும் அக்கவிஞன் சொன்னான். அப்பையனும் மிகஅழகாகவே இருந்தான். அவனது கண்கள் இரண்டும் இரண்டு பிரகாசமான நட்சத்திரங்களைப் போல ஒளிர்ந்தன. அவனது மஞ்சள் தலைமுடியிலிருந்து நீர் வடிவதைப் பார்க்க அழகாக இருந்தது. சுருண்ட தலைமுடி அவனுக்கு மேலும் அழகைக்கொடுத்தது. அவன் ஒரு சிறியதேவதையைப்போல காணப்பட்டான். ஆனால் குளிரினால் வெளுத்த, உடல் நடுங்கியபடி இருந்தது. கையில் அழகான வில்லொன்றை அவன் வைத்திருந்தான். அதுவும் மழையினால் ஈரலிப்பாக இருந்தது. அம்புகளின் நிறம் குளிரால் மாறியிருந்தது.

அக்கவிஞன் குளிர்காயும் அடுப்பின் முன்னால் இருந்துகொண்டு அப்பையனை அணைத்து மடியிலிருத்தினான். அவனது ஈரத்தலைமுடியை துவட்டி அப்பையனின் கைகளை தனது கைகளினால் தேய்த்துவெப்பமாக்கினான். கொதிக்கவைத்த இனிமையான வைனை அப்பையனுக்கு குடிக்கக்கொடுத்தான். இவற்றினால் எல்லாம் அப்பையன் மீண்டும் தனது பழையநிலையை அடைந்தான். அவனது கன்னங்கள் சிவப்பேறியிருந்தன. அவன் கவிஞனின் மடியிலிருந்து கீழே குதித்து அக்கவிஞனைச் சுற்றிச்சுற்றி நடனமாடத்தொடங்கினான்.

"நீ ஒரு சந்தோசமான பையன். உனது பெயரென்ன?" என்று கவிஞன் அப்பையனைக் கேட்டான். "எனது பெயர் Amor(மன்மதன்")என்று அப்பையன் கூறினான்.

"என்னை உனக்குத்தெரியாதா? அதோ இருக்கிறதே அந்த வில்லினால் நான் மக்களைத்தாக்குவேன். அங்கே பார்! வெளியேயும் காலநிலை சீராகிவிட்டது. சந்திரனும் ஒளிரத்தொடங்கிவிட்டான்" என்று அப்பையன் மேலும் கூறினான்.

"ஆனால் உனது வில்லு இப்போதும் ஈரமாக இருக்கிறதே" என்று கவிஞன் வினவினான்.

"அது கடினம்தான்"என்று சொல்லியவாறு அப்பையன் தனது வில்லை கையிலெடுத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

"அது எப்போதோ நன்றாக உலர்ந்துவிட்டது. இந்தவில் இன்னமும் எவரையும் தாக்கவில்லை. அத்துடன் இதுமிகவும் இறுக்கமாகவும் இருக்கிறது. இதனை ஒருதடவை பாவித்துப் பார்க்கவேண்டும்" என்று சொல்லியவாறு அந்தவில்லில் ஒரு அம்பை ஏற்றி அந்த வயதான கவிஞனின் இதயத்தை ஊடுருவுமாறு அந்த அம்பை எய்துவிட்டான்.

"பார்த்தாயா! எனது வில்லு பழுதாகிப்போய்விட வில்லை. நன்றாக அது இயங்குகின்றது." என்று சொல்லிப்பெரிதாகச்சிரித்து தன்வழியே ஓடிப்போனான் அச்சிறுவன். அவன் ஒரு இங்கிதமற்ற பண்பற்ற பையன். இப்படியா அந்த வயதான கவிஞனை எய்வது? அக்கவிஞன் அப்பையனை வெப்பமான அறைக்குள் அழைத்து அவனுக்கு வைனும் அப்பிளும் தந்து அவனிடம் நட்புடனும் நடந்துகொண்டவன். அவனிடம் இப்படியா நடந்துகொள்வது.?

அந்த வயதான கவிஞன் நிலத்தில் விழுந்துகிடந்து அழுதான். அம்பு இதயத்தை தாக்கியிருந்தது."Amor ஒரு இங்கிதம்தெரியாத பையன்.இதைநான்எல்லா நல்லபிள்ளைகளிடமும் சொல்லவேண்டும். அப்பிள்ளைகளை அவனுடன் விளையாடவிடக்கூடாது. அவன் அவர்களுக்கு தீங்கிளைத்துவிடுவான்." இவ்வாறு அக்கவிஞன் சொல்லிக்கொண்டான். இதனை எல்லா சிறுவர்சிறுமிகளிடமும் அவன் சொன்னான்.

சிறுவர்சிறுமிகளும் மிகக்கவனமாக இருந்தாலும் Amor தனது சேட்டைகளை இடைக்கிடை காட்டி அவர்களை மடையர்களாக்கினான் மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்து போகும்போது அவனும் ஓடிப்போய் அவர்களுடன் சேர்ந்து நடந்தான். கறுப்பு உடைகளுடன் புத்தகம் ஒன்றையும் கையில் வைத்திருப்பான். மாணவர்கள் அவனையும் ஒரு மாணவனென்றே நினைத்துக்கொள்வார்கள்.

அந்தவேளையில் அவன் தனது அம்பினால் அவர்களது நெஞ்சை காயப்படுத்தி விடுவான். சிறுமிகள் தேவாலயத்தில் இருக்கும்போதும் பாதிரியாரிடமிருந்து போகும்போதும் அவன் அவர்களின் பின்னாலேயே சென்றான். அவன் எந்தநேரத்திலும் மனிதர்களின் பின்னாலேயே திரிந்தான்.நாடக அரங்குகளில் தொங்கும் பெரிய சரவிளக்குகளின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு அதனை கொளுந்துவிட்டெரியச்செய்வான். மக்களும் அதனை விளக்குத்தானே என்று நினைத்துக் கொள்வார்கள்.ஆனாலும் அவர்கள் ஏதோஒன்றுஅங்கிருப்பதாகஉணர்ந்துகொள்வார்கள். அரசனின் தோட்டத்திலும் ஓடி அங்கும் தனது பயங்கரத்தைக் காட்டுவான்.

ஏன் அவன் ஒருதடவை தனது தாய் தந்தையையும் அவர்களது நெஞ்சில் தனது வில்லினால் எய்திருக்கிறான்.

அவனைப்பற்றி அவனது பெற்றோரிடம் ஏதாவது கேட்டால் "அவன் ஒரு மோசமான பையன். அவனிடம் எதுவும்வைத்துக்கொள் ளாதே. அவன் எப்போதும் மனிதர்களின் பின்னாலேயே திரிகின்றான்" என்றுதான் சொல்வார்கள்.

யோசித்துப்பார்! அவன் ஒருதடவை தனது அம்புகளினால் தன்வயதான பேத்தியையும் தாக்கியிருக்கிறான். ஆனால் இதுமிகநீண்டநாட்களுக்கு முன்னர் நடந்தது.ஆனாலும் அந்த வயதான கிழவி அதனை இன்னமும் மறக்கவில்லை. அவன் ஒரு மோசமான பையன்தான். ஆனால் எவ்வளவு மோசமானபையனென்று இப்போது உனக்கு அவனை நன்றாகத்தெரிந்திருக்கிறது. ■





படிப்பகம்

www.padippakam.com

மலர்தல்
வாடல்
தெரிதல்.............................................பூமி

குனிந்தது ஒரேஇடம்
ஆனால்
எடுத்தவை வேறுவேறு



ஒரு கடை.
நானும் ஏதோ வாங்குவதற்காக கண்ணலைகின்றேன்.
அதேகடையுள் சாமான் வாங்க வந்த டனிஸ்காரர்கள் என்னைப்புதினமாகப் பார்க்கிறார்கள்.
நான் அவர்களைவிட ஏதோ பலவிடயங்களில் வித்தியாசப் பட்டிருப்பது அவர்களைப் புதினப்படுத்தியிருக்கலாம்.
நான் எனது அலுவலில் இருந்தேன்.
மனிதர்கள் குழம்பியிருந்தார்கள். சாமான்கள் றாக்கை களில் வரிசையாக இருந்தன.
விடுத்துவிடுத்து அவர்கள் என்னையே பார்ப்பது எனக்கு ஏதோபோலிருந்தது.

வெளியே வந்துவிடலாமாக என்று ஒருகணம் நினைவு மோத எனது தேவைகளுக்கான சாமான்களை தெரிவு செய்கிறேன்.
என்னை "கள்வன்" என்று நினைத்திருப்பார்களோ?
நினைக்க கூச்சம் தலைக்கேறியது.
சாமான்களைத்தொடவே பாம்பைத் தொடுவதுபோல....
"எட ஈழத்தில் என்ன சுதந்திரமாய் சந்திக்கடையில சாமான் வாங்கிறனான்."
மனதுக்குள்தான் ஏக்கம் எழுந்து வெடித்தது.
எனக்கே உரிய பெருமூச்சு எழுந்து போனது.
எனது கண்கள் சாமான்களில் பாதியும் அம் மனிதர்களில் பாதியுமாக இருக்க ஒருவன் என்னருகில் வருகிறான்.

அவன் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை.
பொத்தியிருந்த தனது கைக்குள்ளிருந்து எதையோ எனது கைக்குள் வைத்துப் பொத்திவிட்டுப் போகிறான்.
எனது கைக்குள் கிடந்து நசியும் அத்திணமத்தைப் பார்க்கவேண்டி எனது பொத்திய கையை விரிக்கிறேன்.
அது ஒரு ஒருகுறோன் டனிஸ்நாணயம்.
என்னை அறியாமலே அந்த நாணயத்தை எனது கை மீண்டும் பொத்திக்கொள்கிறது.
அதைத்தந்தவன் அடுத்தவரிசையில் சாமான் பொறுக்கிக் கொண்டிருந்தான்.
மெல்லச்சென்று வினையமாக என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

வேறு என்ன இந்த உலகத்தின் கடவுளென்றா?
இலங்கை அகதியென்றுதான் அவனிடம் அறிமுகமாகிறேன்.
அவனது கொடுப்பில் கிடக்கும் தங்கப்பல் தெரியச் சிரிக்கிறான்.
"நான் நினைத்தது சரிதான். சென்றவாரம்தான் நான் ஸ்ரீலங்காவுக்கு சென்றுவந்திருக்கிறேன்.
ஏழைப்பட்டநாடு.
பிச்சைக்காரர்கள்.
அங்கு நிறையப்பேருக்கு பணம்கொடுத்தேன்."
பெருமைப்பட்டவனாக எனக்கு அவன் தென்பட்டான்.
சிரித்துக்கொண்டேன்.

இப்போது அவன் எனக்குள் பொத்திய அந்த ஒருகுறோன் பற்றிய விடையம் எனக்கு விளங்கிவிட்டது.
சாமான்களைப்போட்டுவிட்டு கடைக்கு வெளியே வருகிறேன்.
"உட்கார் என்றது ஒரு கல்.
தலைமுடியை ஒருகை கோவிக்கொண்டது.

அலைகடலில் தலைசரித்தபடி தலை
உணர்த்தும் தென்னை.
விழுந்துவிழுந்து மீண்டும் மீண்டும்
மலையேறிக்கொண்டிருக்கும் நதிகள். கடுந்தரை
வாழ்வில் உழவிட்டுப்படுக்கும் உழவர்கள்.
நீள்வலையெறிந்து பாட்டுக்களோடு கரைவலை
இழுக்கும் எம் மீனவர்கள்
காலைப்பசியுடன் பசுங்கொழுந்துகள் கிள்ளி



படிப்பகம்

www.padippakam.com

நிறைக்கும் எனது மலையகப் பெண்கள்.

இப்படி இப்படி......போர்வாழ்வுள் விதைநெல் ஒழித்து பட்டினிகிடக்கும் எல்லாம் நிறைந்த மானிடர் வாழும் நாடு எனது நாடு.
இங்குதான் எனது ஐயாவும் அப்படியே வாழ்கிறார்.
இப்படி கையேந்த[illegible] லே கைக்குள் திரவியம் வரும் வாழ்வு எனக்கு எப்படி வந்தது? திக்கித்துப்போனேன் எனது வாழ்வைநினை[illegible]
மலையையும் [illegible] ளையும் சுத்தமான காற்றையும் சுவாசிக்கத்தான் உல்லாசப்பிரயாணிகள் எங்களிடம் [illegible] அப்போது எனக்குத் தெரியும்.
ஆனால் ஏதோஒருவகையில் வேறுபாடுகளைக் காண்பதிலும், அதன்வழி ஒன்றுகூடுவதிலும் மனித இனம் தனது வெற்றிஎன்று இறுமாப்படைவதிலும், குறுகிப்போவதிலும் மனிதஇனம் இன்று வாழ்ந்து வருகிறது.
இது பொய்யானது.
மனிதஇனம் தோற்றம்பெற்ற காலத்திலிருந்து இத்தகைய முரண்பாடுகளினிடையேதான் ஒரு தனிமனிதனின் உழைப்பு இன்னொருவரால் உறிஞ்சப்பட்டு வந்திருப்பதை நாம் அறிவோம்.
எனது ஐயாவின் உழைப்பு பொய்த்துப்போனகாலங்களில் வறுமையைச்சந்தித்தோம்.
ஆனால் ஐயாவின் உழைப்பு வெற்றியானபோது நாம் பெரிதும் செல்வந்தர்களானதில்லை.

அப்போதெல்லாம் "எனது ஐயாவின் உழைப்பு எங்கே போயிற்று ? என்பது பற்றிய கேள்வி என்னுள் எழும்.

அனால் அந்தக்காலச்சிறுவனானஎனக்கு எதுவும்புரியாமலே அடுத்த விதைப்பு வந்துவிடும்.
மீண்டும் சேறும் விதைப்பும்தான்.
ஆனால் உல்லாசப்பிரயாணிகளாகிய இவர்களை நேர்முகமாகச் சந்திக்கும் பிச்சைக்காரர்களைப்பற்றிய படங்களோடு நாடுதிரும்பிவிடும் இவர்களை........
நான் என்றென்றழைப்பது.
அந்த மனிதர் எனக்குத்தந்த அந்த ஒருகுறோன் நாணயத்தைப்பற்றி எனக்குக் கவலையுமில்லை. துக்கமுமில்லை.
ஆனால் எனக்கு இருக்கும் வறுமைக்கு இது ஒன்றும் செய்துவிடாது.
இந்த ஒருகுறோன் நாணயம்:
எனக்கு எனதுநாட்டில் சுதந்திரத்தை வாங்கித்தருமா?
அந்தத்தென்னை இலை ஆடும் அந்த இளம் காற்றில் எனது கிராமத்தில் நிம்மதியாகப்படுக்க உதவிசெய்யுமா?
எனது முற்றத்தில் பிதுங்கிய பூக்களை கண்டு மகிழ உதவுமா?
நண்பரே! இங்கே வாரும்.
அமைதியாகப்பேசலாமா..
எனது ஐயாவின் உழைப்பு உள்ளிட்டு எல்லாவற்றறையும் விலாவாரியாகப்பேசலாமா?
எப்படி ஆரம்பிக்கலாம்?

இந்த உலகவளங்களை எங்ஙனம்கூறுபோட்டீர்? ........தெரியலாமா?
எப்படி எதற்காக உலகசபைகள் தோன்றின...தெரியலாமா?
உனது அமைதியில் நான் கைதொடவில்லை.
ஆனால் உனது அமைதியில் கொஞ்சத்தையேனும் எனக்கும் தருவாயா?
இது பிச்சை அல்ல.
ஆனால் உன்னிடம் இருக்கும் அந்தச் சுதந்திரத்தில் எனதும் உள்ளடங்கிக் கிடப்பதை நீ அறிவாயா?
வா! உட்கார்ந்து பேசுவோம்.
இந்த ஒருகுறோன் நாணயம் யாரதென்று!
பேசலாமா? நண்பரே!



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை



# கிறிஸ்மஸ் விருந்து

வை.சி.சிவநாதன்.

"நீ சமூகத்தைத் திருத்தாதே"
"இதை நீ சொல்லாதே"

திரும்பத்திரும்ப இதையே சொல்லிக்கொண்டு சத்தம் பெருக்கத்தொடங்கியது.
கணேஸ்,சதீஸ் இருவரும் கைகலக்கும் கட்டம் வந்துவிட்டது.
சதீசின் மனைவி குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தவள். இடையில் நிறுத்திவிட்டு அறைக்கதவை திறந்துகொண்டு வரவேற்பறைக்குள் வந்துவிட்டாள். குழந்தைவேறு அழத்தொடங்கிவிட்டது.

சமையலறையிலிருந்து கணேசின் மனைவி பானு ஓடிவந்து கைகலப்பை நடக்கவிடாமல் தடுத்துவிட்டாள். கணேஸ்,சதீஸ் இருவரும் அமைதியாகி சோபாவில் அமர்ந்துவிட்டனர். கைகலக்கும் அளவுக்கு சத்தம்போட்டவர்கள் சோபாமேசையிலிருந்த சிப்ஸ்,சோடா,,,,,,விஸ்கி இவைகளை சேதம்போகவிடவில்லை. ஆனால் விஸ்கிப்போத்தல் அரைவாசி வரும்வரை சந்தோசமாகத்தான் குடித்தனர்.

இப்போது குழந்தையின் அழுகைமட்டும்தான் அந்தவீட்டில் கேட்டுக்கொண்டிருந்தது. அழுகையுடன் வீட்டின் அழைப்புமணியும் ஒருமுறை கத்திமுடித்தது.

"நல்லநேரம் அவர்களும் வந்துவிட்டார்கள்" என்று கூறியபடி பானு ஓடிச்சென்று கதவைத்திறந்தாள். ராசனும் மனைவி மீனாவும் அங்குவந்திருந்தனர். பிள்ளைகள் வரவில்லையா என்று பானு மீனாவை வினவ......."மூத்தவனுக்கு உடம்புசரியில்லை. பெட்டைக்கும் சளி....அதுதான் அம்மாவோடு வீட்டில விட்டிட்டு வந்தனாங்கள்" என்றாள் மீனா.
"அதுவும் சரிதான் பிள்ளைகளுக்கு சுகமில்ல.. அம்மாவும் தனியத்தான...வாங்கோ உள்ள..." என்று வரவேற்றாள் பானு.
"என்ன பானு சத்தத்தை ; ணேல்ல எங்க இரண்டுபேரும் வெளியிலயோ போட்டினம்.நான்



படிப்பகம்

வேற ஒருபோத்தல் கொண்டுவந்திருக்கிறன்."

என்று கூறியபடி குளிருக்கு தாக்குப்பிடிக்க அணிந்துவந்த யக்கற்றையும் கழற்றி அதில் படிந்திருந்த பனியைத்தட்டி கொழுக்கியில் மாட்டி சப்பாத்தைக்கழற்றிவிட்டு மனைவிக்கு உதவியாக அவளது யக்கற்றையும் வாங்கிக் கொழுவினான்.

"வெளியில போகயில்ல அண்ண, உள்ளதான் இருக்கினம். போத்தல்ல அரைவாசி முடிஞ்சுது. கிறிஸ்மஸ் விருந்து என்று சாலம்போட்டு தொடங்கினவ...இப்ப மூஞ்சையை உரஞ்சிவிட்ட நாய்க்குட்டி மாதிரி கடிபட்டுப்போட்டு ஒருவருடன் ஒருவர் கதைக்காமல் இருக்கினம்."

சொல்லிவைத்தாற்போல் மீனா "அப்ப சண்ட தொடங்கீட்டுதே. எப்ப சண்டைப்படாத நாள். ஒரு நல்லநாள் பெருநாளில சந்தோசமாக இருக்கமுடியாதுபோல கிடக்கு.வேலைக்குப் போறதுகள் உடம்புச் சுகத்துக்கு கொஞ்சமாய் குடிக்கட்டுமென்றால் எங்க சோடாவைக் கலக்காமல்,சோடாமாதிரிக் குடிக்குதுகள் விஸ்க்கியை."

"காணும் மீனா நீங்கள் இரண்டுபேரும்சேர்ந்தால் எப்படியும் ஒருவழி பண்ணிவிடுவியள்.சதீசின் மனைவி சுமதியும் இருக்குது இப்படி ஏதாவது வில்லங்க்துக்கு வருகுதோ. முதல்ல அதைப்பார்த்துத் திருந்துங்கோ." என்று கூறிவிட்டு வரவேற்பறைக்குள் சென்ற ராசன்

"வணக்கம் சுமதி என்ன பெடியன் அழுகிறான்"

"இல்லை பால்குடிச்சவன் இடையில் நிறுத்தியபடியால் அழுகிறான். நான் பால்குடுத்து விட்டு வாறன்" என்று திரும்பவும் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டாள்.

"என்ன சந்நதம் : வந்திட்டுதுபோல...

∴வல்லுவம்,வல்லுவம் என்றே ஆடினது" என்றான் ராசன்.

"நாங்கள் நக்கல்விட்டால் உனக்குப் பிடிக்காது என்பாய். இப்ப உந்த நக்கலைவிடு "என்றான் சதீஸ்.

∴ஒருமுறை ஒருவருக்கு சன்னதம் வந்து ஆடும் போது அவரது வல்லுவம் (கொட்டைப்பெட்டி) கீழே விழுந்துவிட்டது. அதை உருஆடும்போது எடுக்கமுடியாது என்பதால் அவர் "வல்லுவம், வல்லுவம்,வல்லுவம் வல்லுவம் என்று சத்தமிட்டபடி ஆடினாராம்.

"ஏன் சதீஸ் இதை நக்கலாய் பார்க்கிறாய்,சும்மா தமாசாய் பாரனடா....வெளியில மைனஸ் 5. ஆனால் காற்று இல்லை. பனிவேறு நல்லாய் கொட்டுகிறது. வெளியில் ஒருக்கால் போய்வருவம்.என்ன..."

"ராசன்! இப்பதான வந்தனி கொஞ்சமாய் எடு. பொறுத்துப்போவம்" என்றான் கணேஸ்.

"ராசன் இஞ்சைபார்.கோலாவிடுறன்.அளவுகாணுமே....." என்றான் சதீஸ்.

"என்ன புதுமருந்து கண்டுபிடிக்கிறமாதிரி.சரி காணும்." என்றுகூறி கோலாகலந்த விஸ்க்கிக்கிளாசை எடுத்து ஒருமுறை சியர்ஸ் சொல்லிக் கொள்ள மூன்று கிளாசும் ஒன்றுடன் ஒன்றுமுட்டி சிணுங்கிக்கொண்டன.

∴∴

கணேசின் வீடு நகர்ப்புற எல்லையில் வயல்வெளியில் அமைந்திருந்தது. இப்போது வயல்வெளி என்று கூறுவதைவிட வெள்ளை மண்வெளி என்றே கூறலாம். மண்வெளி என்றால் இரவில் வெளிச்சத்தை உறிஞ்சிவைத்து இருட்டாக இருக்கும்.இது பனிவெளி என்பதால் நீலநிறம் கலந்த இருளாக ஆனால் மினுமினுத்துக்கொண்டிருந்தது. பனியால்மூடப்பட்ட வீடுகள் ஒருபுறம் ஜன்னல்களின் வழியால் மின்வெளிச்சம் வெளியே கண்திறந்துகொண்டிருந்தது. ஆகாயத்திலிருந்து பனிப்பஞ்சுகள் ஆடி ஆடி நிலத்தைத்தை தொட்டன.ஆடி நிலத்தைத்தொடும் பனிப்பஞ்சு தெருவிளக்கு ஒளியில் பூவாணம் தலைகீழாக சீறுவதுபோல் இருந்தது. சவுக்க மரங்களில் பனி படுத்திருந்தது.தொடர்ந்து பனி கொட்டிக்கொண்டிருந்ததால் புதிதாக மூவர் நடந்துசென்றதற்கான தடங்கள் மட்டும் இருந்தன.

அந்த இரவிலும் சதீஸ் சவுக்கமரத்தில் ஒருதட்டுத்தட்டி அதில்படிந்திருந்த பனியை நிலத்தில் விழுத்துவதில் அவனுக்கு ஒரு தனி ஆனந்தம். இந்த அழகை சதீஸ் ஒரு கவிதையாகச்சொன்"னான். இதைப்பொறுக்கமுடியாமல் கணேஸ்

www.padippakam.com

பனியில் பந்துசெய்து சதீசின்மேல் எறிந்தான். இதுபோன்று தெருவிளக்குகளில் வேறு சிறுவர்களும் பனியில் விளையாடிக்கொண்டிருந் தனர்."வீட்டிலிருந்து அரைமணிநேரம் நடந்து விட்டோம். இனி வீடுதிரும்புவம்.போட்டதும் முறிந்துவிட்டது. இப்போது நல்லமூட் மூவருக்கும் என்று நான் நினைக்கிறேன். ராசன் என்ன உன்ர மூத்தவன் தமிழ்ப்பாடத்தில குஸ்பு என்று சொன்னானாம்." என்றான் கணேஸ்.

"அது ஒன்றுமில்லை பூக்களின்ர பெயரை எழுதிவரச்சொல்லி வீட்டுப்பாடம் கொடுத்தவராம் ஆள்வார்ப்பிள்ளை வாத்தியார். அதைவாசிக்கச் சொல்ல நாலுபூவின் பெயருக்குப்பிறகு "குஸ்பூ" என்று சொல்லியிருக்கிறான்.அவர்இதை எனக்குச் சொல்லிச் சிரிச்சவர்.சிரிச்சவர் சும்மாய் இருந்திருக்கலாம்தானே"

"என்னடா ஏதாவது பெடியனை அறுக்கை பண்ணு.அடிபோடு என்றவரோ" என்றான் கணேஸ்.

"இல்ல இந்த இந்திய,இலங்கை தமிழ் பாடப்புத்தகங்களை இந்கு படிப்பிப்பதில் பலசிரமங்கள் இருக்கு என்றார்".

"குஸ்பு வைக் கதைத்தாய் சரி.இப்ப என்ன தமிழ்பாடப்புத்தகம் என்று சொல்லுறாய். குழப்பாத ராசன். குளிர் இல்லத்தான் வெளியில.ஆனால் வாயால புகைவருகுது. இதுக்க இந்த குழப்பவேல செய்யாத"இது சதீஸ்.

"இதில என்னடா குழப்பம் இருக்கு. உனக்கு நான் சொன்னது அரைகுறையாய்த்தான. இலங்கைச்சூழல்,சுற்றாடல்,பாவனைப்பொருட்கள் இதைவிட அங்குள்ள கலாச்சாரப்பின்னணி இவைகளை மையமாக வைத்துத்தான் எமது பாடத்திட்டம் அமைந்துள்ளது. பாடத்திட்டத்தின் அடிப்படையில்தான் பாலர்வகுப்பு,முதலாம் இரண்டாம் வகுப்பு என பாடநூல்கள் அமைகின்றன.இப்படி இந்திய, மலேசிய,சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தமிழ்பாட நூல்கள்உண்டு. இந்த நாடுகளிலுள்ள தமிழ்பாட நூலுக்கும்கூட பல ஒற்றுமைகள் வேறுபாடுகள் இருக்கின்றன."

"டேய் உந்த ஒற்றுமை வேற்றுமை இருக்கட்டும். உது விளங்கிக்கொள்ளக்கூடிய தொன்றுதானே "என்றான் கணேஸ்

"உனக்கு நீட்டிச்சொன்னால் பிடிக்காது.சதீசுக்கு அரைகுறை சுருக்கமாகச்சொன்னால் பிடிக்காது. நான் என்ன செய்யுறது.இப்படி இலங்கை இந்திய சூழல் பாவனைப்பொருள் பின்னணியை மையமாகக்கொண்டு அமைந்த பாடநூல்களை அப்படியே இங்கு பாவிக்கும்போது இங்குள்ள பாவனைப்பொருட்கள் சூழல் சுற்றாடல் எங்கள் நாட்டுநிலமையிலிருந்து மாறுபட்டது என்பதால் இங்குள்ள தமிழ்குழந்தைகளால் அதைவிளங்கிக் கற்றுக்கொள்வதில் பல தடைகள் உண்டு என ஆள்வார்ப்பிள்ளை வாத்தியார் சொல்லுறார். இது அவரின் அனுபவம்.அதை அவர் விளங்கிக்கொண்டவிதம் அவருக்கே உரிய தன்மையுடன் இருக்கு.இதை அவர் சொன்னபோது எனக்குப்பெரிய ஆச்சரியமாக இருக்கேல்ல.ஏனெண்டால் வீட்டில என்ர இரண்டு பிள்ளைகளும் தமிழ் படிக்கும்போது எனக்கு தட்டுப்பட்ட விசயம்தான். ஆனால் அவர்சொன்னபோதுதான் அட..இதுதானே விசயம் என்று வெளிச்சுது".என்றான்.

"உனக்கு வெளிச்சது இருக்கட்டும். எங்களுக்கும் கொஞ்சம் வெளிக்க விடுங்கோடாப்பா...." என்றான் சதீஸ்.

"சதீஸ் வீடு வந்திட்டுது.இனி உள்ளபோய் கொஞ்சமாய் எடுப்பம்.எடுத்திட்டுக் கதைப்பம்." என்றான் கணேஸ்.

***

ஜக்கற்றுகள் கழன்று அதற்கான இடங்களில் அமர்ந்து கொண்டன.சப்பாத்துக்கள் வாசலுடன் நின்றுவிட்டன.கணேசின் காப்பற் புதிதுமட்டுமல்ல அதை அடித்தவர்களும் இந்த மூன்றுபேரும் என்பதால் இயல்பான மரியாதைவேறு. சாப்பாட்டு மேசைக் கதிரையில் மூன்று பெண்மணிகளும் சரளமாக சுதந்திரமாக கதைத்தவர்கள் இவர்கள் வந்ததும் பேச்சுச்சத்தம் சற்று சுதிமாறியிருந்தது. வந்தவர்கள் வரவேற்பறைக்குள் சென்று சோபாவில் அமர்ந்துகொண்டனர்.

விஸ்க்கிக்கு கூட்டாக இறைச்சிக்கறி வேறு சோபாமேசையில் இருந்தது. ஆனால் சூடு



படிப்பகம்

www.padippakam.com

ஆறிவிட்டது.
"சரி சூடாக்கி எடுத்துவாறன்; ஒருபெக் ஊத்துங்கோ வாறன்" எனக்கூறி கணேஸ்இறைச்சியைசூடாக்கச்சென்றுவிட்டான். விஸ்கி அளவு சமனாக விடப்பட்டது. கோலாஅளவுதான் பிரச்சனை எனபதால் அவரவர் அளவுக்கு கோலா கலக்கப்பட்டது. மீண்டும் "சியர்ஸ்" மீண்டும் கிளாசுகள் சிணுங்கிக்கொண்டன. கணேஸ் தம்பதிகளுக்கு எட்டுவருடமாக பிள்ளை இல்லை என்பதால் குடிக்கும்போதெல்லாம் அவன் மனதிலுள்ளதை கொட்டிவிடுவான். இதுவேற பிரச்சனைதான். இதுவும் அவர்களுக்குள்ள பிரச்சனைகளில் ஒன்று.
"சரி சரி இந்தப் பிள்ளையள் தமிழ்படிக்கிறதில் இவ்வளவு பிரச்சனையோ" என்றான் கணேஸ்." இதில் பிரச்சனை என்று எதுவுமில்லை. இப்படி ஒரு சின்ன இடைஞ்சல் இருக்கு இதைத்தீர்த்தால் தமிழ்படிப்பதில் சிரமங்கள் குறையும். இல்லாவிட்டால் காலப்போக்கில் AMMA –அம்மா என்று ஆங்கில எழுத்தில் உச்சரித்து தமிழில் ராகம்போடத்தான் வேண்டும். இப்படித்தான் அவுஸ்த்திரேலியா, லண்டனில நடக்குது".

இந்தக்கதைகளுக்கு மகளிர் அணி காதுகொடுத்துவிட்டதற்கான அடையாளமாக அவர்களின் கதை குறைந்துவிட்டது.
"என்னடா அவுஸ்த்திரேலியா லண்டன் என்று சொல்கிறாய். சூழல்சுற்றாடல் என்றாய் சும்மாய் ஒருக்கால் விளங்கப்படுத்தன் உதாரணத்துக்கு". என்றான் சதீஸ்." ஆள்வார்ப்பிள்ளையர் ஒருக்கால் சொல்வதெழுதல் பாடம் நடத்தியிருக்கிறார்.அதில் இவர் எமது அயல்நாடு இந்தியா.இலங்கை இந்தியாவைப்பிரிப்பது பாக்குநீரிணை....." என்று சொல்ல ஒரு மாணவன் எழுந்து வாத்தியர் "எமது நாட்டுக்கு அருகில் இருப்பது ஜேர்மனி என்பதுதான் சரி" என்றான். வாத்தியார் விறைச்சுப்போனாராம்.டென்மார்க்கிலுள்ள பிள்ளைகளுக்கு அயல்நாடு ஜேர்மனிதானே? அகதியாகப் புலம்பெயர்ந்தால் முகமில்லை என்பதற்கு என்ன வேணும் இதைவிட. இதை நான் சொல்லுறன். ஆனால் வாத்தியார் சொன்னது வேறு."
"என்னடா சொல்லு கேட்ப்பம்" இது சதீஸ்.
"கேள்விகேட்டு அயல்நாடு ஜேர்மன் என்று கூறிய மாணவனை அவர் கலிலியோவைதான் அவனில் கண்டுவிட்டேன் என்றார். பூமியை உருண்டை என்று கலிலியோ சொல்லும்போது அவனை கல்லால் அடித்துத்தான் கொன்றவர்களாம்.இந்தக் கலிலியோ தமிழ்ப்பாடப்புத்தகத்திலுள்ள பற்றாக்குறையை தனக்கு விளக்கிவிட்டான்." என்றார்.பூமி உருண்டை என்றவிடையம் சின்னது இல்லையாம்.பூமி தட்டையானது என்பதை ஆதாரமாகக்கொண்ட அத்தனை கருத்தியல்களும், கற்பனை க்கதைகள் எல்லாம் அடித்துநொருக்கிய ஒரு உண்மையாம். என்று மிகவும் அற்புதமாகச்சொன்னார். எனக்கு அவர் சொன்னதில் முழுக்க விளங்காவிட்டாலும்; அவர் சொன்ன விடையம் பிடிபட்டிட்டுது.அது காணும்"

"ராசன் என்ர மனிசியும் கம்பஸ் கண்டியோ.... அவவையும் ஒருக்கால் கேட்ப்பம் இதைப்பற்றி என்ன...சுமதி! ராசன் இங்க சொல்லுறத கேட்டுக்கொண்டுதான இருந்தனி....இதைப்பற்றி என்னப்பா நீர் நினைக்கிறீர்" என்றான் சதீஸ்.
"கம்பஸ் என்று தலப்பா கட்டாத சதீஸ். தலப்பா ஆண்களுக்கத்தான் அழகு.
"வீட்டுக்குள்ள வந்த பிறகு நீங்கள் கதைச்சதை வைச்சுக்கொண்டு என்ன சொல்லுறது.இது சாதாரணமான சிடையம்தான்.பாடமாக்கிப் படிக்கிறதுக்கு பெரிசாக் கதைக்கிறியள்.ஆனால் சீரியஸாய் கதைக்கிறியள் என்றத எனக்கு விளங்குகின்றது. இங்கு வளர்கின்ற பிள்ளைகள் எந்த மொழியில சிந்திக்குதுகள் என்பதுதான் முக்கியம் சதீஸ்.

பாடத்திட்டம், பாடப்புத்தகம் சூழல் சுற்றாடல் பாவனைப்பொருள் இப்ப என்னடா இங்குள்ள பிள்ளைகள் சிந்திக்கிற மொழி அத என்ன? என்றான் சதீஸ்.



படிப்பகம்

www.padippakam.com

கணேஸ் அண்ணா! பிள்ளைகள் பெரும்பாலும் டெனிஸ் மொழியில்தான் சிந்திக்கின்றன.இதை நீங்கள் எங்கடை பிள்ளையள் தனியாக விளையாடும்போது அல்லது சண்டை பிடிக்கும்போது எந்த மொழியை பயன்படுத்துகின்றன?

டெனிஸ் மொழியைத்தான்.இங்கு வந்தவர்களைவிட இங்கு உள்ள இரண்டாவது தலைமுறைக்கு டெனிஸ் மொழிதான் சிந்தனைமொழியாக இருக்கும் என்பது எனது கருத்து.இதையும் யோசியுங்கோ" என்றாள் சுமதி.

"நாங்கள் எங்கடை மற்றவன் குஸ்பூ எண்று பூவுக்கு பெயர் சொன்னதும் கதைத்தனாங்கள். அப்ப இதுகள் சின்னவிடையம்.எதிர்காலத்தில் இன்னும் பெரிய விடையங்கள் நடக்கும் என்று சொன்னது இதுவே" என்றாள் மீனா.

"அப்ப இதுகளைப்பற்றியும் நீங்களும் கதைக்கிறியள்" என்றான் சதீஸ்.

"சதீஸ் கனநாள் பாத்திருக்கிறன் பெண்கள் என்றால் தமிழ்ப்படம்.சீலை,நகை இதுகளைத்தான் கதைப்பம் எண்டு ஒரு மட்டமான குணம் உனக்குமட்டுமில்ல இஞ்சை கனபேருக்கு இருக்கு.இதையும் மாத்துங்கோ.இல்லாட்டில் என்ன கதைச்சாலும் உருப்படாது." என்று சீறினாள் சுமதி.

"அம்மா ராசாத்தி போதும் இந்த சூடு.இனி அடுப்பங்கரைக்கு வராது;இந்தப்பூனை." என்றான் சதீஸ்.

"சதீஸ் உன்ர சுபாவத்திற்கு இன்று சரியாக வேண்டிக் கட்டிக்கொண்டாய்.அதைவிடு...... சிந்தனா மொழிக்கு சூழல் சுற்றாடல்தான் மையமானது. டெனிஸ்மொழி பயிலப்படும் சூழலிலும் சுற்றாடலில் டெனிஸ்மொழிதான் சிந்தனைமொழியாக அமையும் "என்றான் சதீஸ்.

அதுசரி ராசா அண்ண! யார் இதைச் செய்யிறது? எப்ப செய்யிறது? என்றாள் சுமதி. ஒருவரை ஒருவர் இப்போதே தீர்வு தாம்பாழத்தில் கிடைத்துவிடுமா என்பதுபோல் ஒருவரைஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"இது ஒரு அறிமுகத்துக்காக இப்ப கதைச்சனாங்கள்என்றுதான் சொல்லவேண்டும். இதை அரைகுறை விளக்கத்துடன் செய்தால் என்னவோ செய்யப்போய் என்னவோ வந்தமாதிரித்தான் இருக்கும்." என்றான்

"என்னப்பா இது ஒரு நல்லவிசயம்போல கிடக்கு சும்மா இருக்கிறியள்" என்றாள் பானு.

"இல்லைப்பானு எங்களுக்கு பிள்ளை இல்லை என்பதால் இதிலை அக்கறை இல்லை என்று நினைக்காதே. எனக்கு விளங்கியது மிகக் குறைவு .அரைகுறையாக விளங்கிக்கொண்டு எப்பிடி கதைக்கிறது என்பதுதான் என்நிலமை." என்றான். கணேஸ்,

"கணேஸ்! ஒரு பிரச்சனை தொடர்பான விளக்கம் என்பது அவரவர் தேவையைப் பொறுத்தது. அதற்காக உன்னை குறை சொல்வதாக நினைக்காதே. ஒருதேவையுடன் இணையும் நல்லமனம் எங்களுக்கு இருக்கு என்பது எங்களுக்கு தெரியும்.மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? என்றுதான் நினைக்கிறன் "என்றான் ராசன்.

"சரி சாப்பாடு ஆறிவிட்டது.சூடாக்குகின்றேன்.. எழும்புங்கள் சாப்பிடுவம்" என்றாள் பானு.

மிகுதியாக இருந்த விஸ்கியும் தீர்ந்துவிட்டது. கிளாசுகளும் சிணுங்கி ஓய்ந்துவிட்டது.சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தவர்கள் சாப்பிடத் தொடங்கிவிட்டனர்.

நல்ல கிறிஸ்மஸ் விருந்து என்ற ஒரு சந்தோசம் ஒருபுறம்.

இந்தமுறை கணேஸ் வீட்டில் கொண்டாடினோம்.அடுத்தமுறை யார் வீட்டில் கொண்டாடுவது என்பதையும் தீர்மானிப்போம்" என்றான் சதீஸ்.

"அடுத்தமுறை எங்கள்வீட்டில்" என்றாள்மீனா.

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

## வேதாளம் சொன்ன கதை

கே.எஸ்.துரை

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் முருங்கை மரத்தில் ஏறி வேதாளததைப பிடித்து தோளில் தூக்கிக் கொண்டு காட்டுவழி நடந்தான். நடுவழியில் கலீரென நகைத்த வேதாளம் விக்கிரமாதித்தனைப் பார்த்து ஒரு கதை கூறியது.

ஒரு ஊரில் கந்தன் என்னும் கிழவன் ஒருவன் இருந்தான். அவன் யாருடனும் பேசுவதில்லை. தானும் தன்பாடுமாக வாழ்ந்து வந்தான். ஊரின் ஒதுக்குப் புறத்தில் அவன் குடிசை இருந்தது.

அவன் எப்போதும் மௌனமாகவே திரிவதால் ஊரில் அவனைப்பற்றிப் பல கதைகள் பரவின.

அவன் ஒரு சிறந்த பாடகன் என்று சிலமக்கள் சொன்னார்கள். " இல்லை நாங்களும் கேட்டோம்! அவன் பாடல்கள் மிக மோசமானது " என்று வேறுசில மக்கள் அவர்கள் சொன்னதை , எதிர்த்தார்கள்.

கோபம் கொண்ட மற்றவர்கள் தாமும் கந்தனின் பாடலை தினசரி கேட்பதாகவும். கந்தன் நல்ல பாடல்களைத் தமக்காவே பாடுவதாகவும்: தீயவரின் முன் அவன் நல்ல பாடல்களைப் பாடுவதில்லையென்றும் கூறினார்கள். ஏட்டிக்குப் போட்டியாகப் பிரச்சனை நாளுக்கு நாள் சூடேறியது.



படிப்பகம்

www.padippakam.com

இனிமையான பாடகனான கந்தன் இனியாவது பக்கம் சாராது: எல்லோருக்குமாகப் பாடவேண்டுமென பல பத்திரிகைகள் எழுதின. தொலைக்காட்சிகளும் அதையே வலியுறுத்தின.

கந்தன்மீது கோபம்கொண்ட சிலர் நள்ளிரவில் சென்று அவனது சிறு குடிசையை எரித்தனர். கந்தனை ஊரைவிட்டே விரட்டியடித்தனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட வேறுசிலர் கந்தனை அடித்துக் கலைத்தவர்கள் மீது கடும் கோபம் கொண்டனர். இரு குழுவினருக்கும் இடையே முதலில் சிறிதுசிறிதாக ஆரம்பித்த சண்டை கடைசியில் பெரும் போராக மாறியது . பலர் இறந்தனர். ஊர் எரிந்தது. கடைசியில் எல்லோரும் கந்தனே இதற்கெல்லாம் காரணமென முடிவெடுத்து, அவனைக் கொல்லத்தேடி அலைந்தனர். ஆனால் கந்தனைத் தேடிப்பிடிக்க முடியவில்லை.

இந்தளவில் கதையை நிறுத்திக் கொண்ட வேதாளம் இவ்வளவு நடந்தபிறகும் கந்தன் ஏன் எல்லோருக்குமாகப் பாடாமலிருந்தான் ? என்று கேட்டது. இதற்குச் சரியான பதில் தெரிந்திருந்தும் நீ கூறாவிட்டால் உன்தலை சுக்கு நூறாய் வெடித்து இறப்பாய் ! என்றும் எச்சரித்தது.

கடுமையாக யோசித்த விக்கிரமாதித்தன் , " கந்தன் ஒரு ஊமை ஆகையால்தான் அவன் மௌனமாயிருந்தான். ஒரு ஊமையால் எப்படிப் பாடமுடியும் ? என்றும் கேட்டான் . சரியான பதிலைக்கேட்ட வேதாளம் அவன் ஊமையென்பதை மற்றவர்களுக்கு சைகைமூலமாவது மக்களுக்கு விளக்கியிருக்கலாமே ? ஏன் அப்படிச் செய்யவில்லை என்று மறுபடி கேட்டது.

உண்மையான காரணத்தை சரியாக அறியாது பகைகொள்வோருக்கு உதவுவதில் பயன் எதுவுமில்லை. ஏனெனில் எப்போதும் உண்மையை ஒவ்வொருவரும் தாமாகவே உணரவேண்டும்! என்பதற்காகவே அவன் தான் ஒரு ஊமை என்பதையும் கூறாதுவிட்டான் ! என்று கூறினான். சரியான பதிலைக்கேட்ட வேதாளம் கலீரெனச்சிரித்து மறைந்தது.




படிப்பகம்

www.padippakam.com

# மறுப்பதும்.
# ஏன்...?

தங்கக்காசை .....
புரட்டிப், புரட்டிப்..
தடவிப்பார்க்கின்றாய்...! சிறு
செப்புக்காசை ......
புரட்டி, புரட்டி..
உரைத்துப்பார்க்கின்றாய்....
நோட்டுக்காசை ..
திருப்பித்,திருப்பித்.....
கோட்டைப் பார்க்கிறாய்....!
நடுக்கோட்டைப் பார்க்கின்றாய்...!
மனித உள்ளம்தன்னை...
திருப்பிப் பார்க்க.....!
ஏனோ...! மறக்கின்றாய்...! அவன்
மறுபுறத்தை நீயும் பார்க்க...
ஏனோ...! மறுக்கின்றாய்...! மானிடமே..
ஏனோ...! மறுக்கின்றாய்.....!




அகத்தினழகை....
தேடமறந்து.....போய்
உடலினழகை....
தேடியலையும்...மானிடமே...! உடல்
அழகு என்பது..! தேன்கூடு...அதைத்
தொட்டால் குத்தும்...!
தேன்குளவி.....!
என்பதை நீயும் மறந்ததுமேன்.....?
எண்ணிட நீயும் மறுப்பதுமேன்....?

மழையைக்கண்டு சிப்பதுமட்டும்...!
மண்தானா....? சில
மனிதர் செயலைக்கண்டு.....!
வெறுப்பதுமட்டும்......!
மானிடமா..........? இதை
எண்ணிட நீயும் மறப்பதுமேன்...?
உணர்ந்திட நீயும் வெறுப்பதுமேன்..?
உண்மையென்றிட நீயும் மறுப்பதுமேன்...?

வேலணையூர் பொன்னண்ணா.



படிப்பகம்

www.padippakam.com

# வழக்கு



செல்வன்.

அகதிகள் நீதிமன்றத்திற்குள் நாங்கள் நுழையும்போது நேரம் பன்னிரண்டுமணியைத் தாண்டியிருந்தது. பாலா அண்ணைக்கு ஒரு மணிக்குத் தான் வழக்கு. எனவே நாம் காத்திருப்பதற்கு என ஒதுக்கப்பட்ட அறைக் குள் நுழைந்தோம். அங்கே இரண்டு ஆபிரிக்க இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். எங்களைக் கண்டவுடன் ஆங்கிலத்தில் தமது மதிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டனர். நாங்களும் அவர்களுக்கு எங்கள் பதில் வணக்கங்களை தெரிவித்து விட்டு அந்த அறையில் போடப்பட்ட கதிரைகளில் சென்று அமர்ந்து கொண்டோம்.

பாலா அண்ணை அடிக்கடி தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துச் சலித்துக்கொண்டார். நான் பல சமயங்களில் டென்மார்க்கில் அகதிகள் நீதிமன்றத்தில் அகதிகளின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதை யும், இலங்கையில் மாணவன் ஒருவன் போட்டிப்பரீட்சை ஒன்றிற்கு தோற்றுவதனை யும் ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. தோற்றுவதற்கு முதல் எதிர்நோக்கப்படுகின்ற படபடப்பு, மனப்பயம், நம்பிக்கையீனங்கள் ஆகியவற்றில் இரண்டும் ஒன்றுபட்டாலும் மாணவன் ஒருவன் கடுமையாக உழைத்தால் எப்படியும் பரீட்சைகளில் சித்தியடைய வாய்ப்பு உண்டு, தவறினாலும் மீண்டும் ஒருதடவை பரீட்சை யில் தோற்றுவதற்கு வாய்ப்பு உண்டு. அவையெல்லாம் இங்குள்ள அகதிகளுக்குப் பொருந்தாது. முன்னரேயே தீர்ப்புக்கள் தீர்மானிக்கப்பட்ட பின் இடம்பெறுகின்ற விசாரணைகள் போலவே பெரும்பாலான வழக்குகள் இடம்பெறுகின்றன.

பாலா அண்ணை சிறுகுழந்தை போல் பல தடவைகள் கேட்ட அதே கேள்வியையே மீண்டும் என்னிடம் கேட்டார்.

„நீ என்ன நினைக்கிறாய், எனக்குக் கட்டாயம் கிடைக்கும் தானே தம்பி?"

„நீங்கள் யோசிக்காதையுங்கோ அண்ணை, உங்களுக்கு கட்டாயம் கிடைக்கும்."

இவ்வாறுநான் அவருக்கு நம்பிக்கையளித் தாலும் என்மனதுள் என்னவோ பயமாக இருந்தது. அவரது மனப்பயங்களையும்,



படிப்பகம்

www.padippakam.com

படபடப்புகளையும் என்னால் எப்படியும் குறைக்க முடியாது என்று நான் கருதிய தனால் நானும் எதுவும் கதைக்கவில்லை. எனவே அதன் பின் வந்த நிமிடங்கள் மௌனமாகவே கரைந்து போயின ஒரு மணிக்கு சில நிமிடங்கள் முன்னராக பாலா அண்ணையின் வழக்கறிஞர் ஒரு மொழி பெயர்ப்பாளருடன் வந்து அவரை அழைத்துச் சென்றார். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் அங்கிருந்தமற்றைய இருஆபிரிக்க இளைஞர் களையும் அவர்அவர்களது வழக்கறிஞர்கள் வந்து அழைத்துச் சென்றனர். நான் மட்டும் தனியாக அந்த அறையில் அமர்ந்திருந்தேன். பாலா அண்ணையின் வழக்கினை ஏறக் குறைய மூன்று வருடங்களுக்குப்பின் நீதிமன்றம் எடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மணித்தியாலங்களில் அவருடைய மூன்று வருடக்காத்திருப்பின் பெறுமதிகள் புரிந்துவிடும். ஒருவேளை இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு பாதகமாக இருக்கு மானால் அதன்பின்பு அவர்களாகப் பார்த்து மனிதாபிமானரீதியில் அகதிஅந்தஸ்து வழங்கி னால் தான் உண்டு. அதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்றெல்லாம் திட்ட வட்டமாகக் யாராலும் கூற முடியாது. அதற்குள் இந்த மனிசன் குடித்தே தன்னை அழித்துக்கொண்டுவிடும். நாளாக நாளாக பாலா அண்ணையைக் கட்டுப்படுத்த முடியாத காரியமாகிவிட்டது.

பாலாஅண்ணைக்கும் எனக்கும் ஏறக்குறைய மூன்று வருடகாலப் பழக்கம். ஒரே அகதி முகாமில்– அதுவும் ஒரே அறையில் – இன்னும் சொல்லுவதென்றால் அடுக்கடுக்காக கீழும்மேலும் பொருத்தப்பட்ட கட்டில்களில்... அந்தக்கனம் நிறைந்த நாட்களை நாங்கள் செலவிட்டிருக்கிறோம். வெளிச்சங்களை அணைத்துவிட்டு இருட்டுக்குள் இருந்து கொண்டு இருள்சூழ்ந்த எதிர்காலங்களைப் பற்றி பேசிப்பேசியே பல இரவுகளை நாம் விரட்டியிருக்கிறோம்.

அந்த அகதிமுகாமிலுள்ள பல வீடுகளில், நாங்கள் ஏறக்குறைய இருபது தமிழர்கள் ஒரு தனிவீட்டில் வாழ்ந்து வந்தோம். அங்கு வயதில் மூத்தவரான பாலசுப்பிரமணியம் ஆகிய பாலாவை நாமெல்லாம் பாலா அண்ணா என்று அழைப்பது வழக்கம். பாலா அண்ணையின் பிறப்பிடம் புங்குடுதீவு. அவரின் கருத்துப்படி அதன் உண்மையான பெயர் பொன்கொடு தீவு என்பது தானாம். அது காலப் போக்கில் புங்குடுதீவு ஆகி விட்டது என்று அவர் வாதிடும்போது அவரை எவராலும் இரசிக்காமல் இருக்க முடியாது. அவரது பள்ளிப்படிப்பு மிகவும் சாதாரணமானது தான். தான் கொழும்பில் ஒரு கடையில் எடுபிடிவேலை செய்யும் பையனாக வேலை செய்ய ஆரம்பித்த பின்னரே தமிழில் எழுத்துக்கூட்டி வாசிக்கக் கற்றுக் கொண்டதாக அவர் பல தடவைகள் கூறியிருக்கிறார். அதற்காக அவரை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது. மனுசனிடம் வாயைக்கொடுத்தால் எவரும் தப்பமுடியாது. இதிகாசங்களிலிருந்து நவீன இலக்கியங்கள் வரை அவருக்கு அத்துப்படி. வாசிப்பு என்பது மனிசனுக்கு ஒரு கலை.

எல்லாவிதத்திலும் அவர் நல்ல மனுசன் தான். ஆனால் தண்ணியடிச்சால் மட்டும் மனுசன் துட்டுக்கும் உதவாது. தண்ணி அடித்து விட்டு சண்டித்தனங்கள் பண்ணுபவர்கள் ஒரு ரகமென்றால் பாலாஅண்ணை ஒரு தனி ரகம். அவருக்கு தண்ணி அடித்தால் பலரைக்கூட்டி வைத்து பம்பல் போட வேண்டும். எங்களுக்கு ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் வாராந்த உதவிப்பணம் கிடைக்கும். அந்த நாட்களில் பாலா அண்ணையின் கண்ணில் படாமல் நடமாட நாங்கள் படும்பாடுகள் சொல்லி மாளாது. நாங்கள் இப்படி தனக்காக ஒளிக்கிறோம் என்று தெரிந்தால் அவரின் குறி இன்னும் அதிகரித்துவிடும். தப்பித்தவறி மனுசனிடம் மாட்டுப்பட்டால் அன்று எமக்கு மீட்சி யில்லை. அவரின் மனோநிலையை எவ்வாறு இருக்கிறதோ அதற்கெல்லாம் நாம் ஆட வேண்டி வரும். சிலநேரங்களில் அவரது மனைவி ஊரில் இருந்து எழுதிய கடிதத்தை வாசித்துக்காட்டி அது தொடர்பான



படிப்பகம்

www.padippakam.com

வியாக்கியானங்கள் இடம்பெறும். சிலநேரங்களில் அவற்றுக்கு பதில்கூட அவர் சொல்லச் சொல்ல நாங்கள்தான் எழுதிக்கொடுக்க வேண்டியும் வரலாம். அவர் கதைக்கிற விதத்தாலும் அவரது அணுகுமுறையாலும் பெரும்பாலும் எவருக்கும் அவரின் மனம் நோகக்கதைக்க இடம் தராது.

பாலா அண்ணை குடிக்கத்தொடங்கினார் என்றால் அறவே சாப்பிடமாட்டார். சிலநாட்களில் தொடர்ந்து குடித்துக் கொண்டேயிருப்பார். அத்தகைய மாதங்களில் தன் குடும்பத்துக்கு வழமையாக மாதாந்தம் அனுப்பும் பணத்தைக்கூட அவரால் அனுப்ப முடியாது போய்விடும். மாதப் பணத்தை எதிர்பார்த்து பணம் வராததால் அவரது மனைவி பிள்ளைகள் கவலைப்பட்டு எழுதும் கடிதங்களில் பெரும்பாலானவற்றை அவரே எனக்கு வாசித்துக் காட்டுவதுண்டு. அத்துடன் இவ்வாறான கடிதங்கள் வந்தால் தொடர்ந்து ஓரிரு மாதங்களுக்கு குடிப்பதனைக்கூட முற்றாக நிறுத்தி விடுவார். அத்தகைய காலங்களில் திருநீற்றுப் பட்டையும் நெற்றியுமாக போர்வைக்குள் முடங்கியவாறு புத்தகங்கள் வாசிப்பதிலும் நித்திரையிலும் நாளின் பெரும்பாலான நேரத்தைக் கழிக்கும் அவரைப்பார்க்க மிகவும் பரிதாபமாக இருக்கும்.

பாலா அண்ணையின் வழக்கு நீதிமன்றத்துக்கு வருவதற்கு ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது. அது ஒரு வியாழக்கிழமை பின்னேரம். எங்கள் முகாமில் சிறிய உள்ளரங்க மைதானம் உண்டு. பெரும்பாலும் பின்னேரங்களில் நாங்கள் அங்கு வொலிவோல் விளையாடுவது வழக்கம். அந்த அரங்கில் வொலிவோல் விளையாடுவது என்றால் ஒவ்வொரு அணியிலும் குறைந்தது மூன்று பேர் வீதம் குறைந்த பட்சம் ஆறுபேர் இருக்கவேண்டும். அந்த முகாமில் எம்முடைய இன்னுமொரு அறைவாசியான நாதனும் நானும் தான் வொலிவோல் விளையாடுவதில் அதி ஆர்வம் கொண்டவர்கள். மற்றவர்கள் எங்கள் ஆக்கினையின் காரணமாக வொலிவோல் விளையாட வருபவர்கள் என்றே கூறலாம். வழமையாக எங்கள் இருவரையும் தவிர மீதி நான்கு பேரைத் திரட்டுவதற்கு அங்குள்ளவர்களுடன் நாங்கள் அளவுக்கு அதிகமாக குழைய வேண்டியிருக்கும். குறிப்பாக உதவிப்பணம் கிடைக்கும் வியாழக்கிழமைகளில் ஆள் திரட்டுவது என்பது ஒரு பிரமபிரயத்தனம்.

அன்றைய தினம் நாதன் தான் கெஞ்சிக் கூத்தாடி ஒரு மாதிரி எமக்கு தேவையான ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்தான். மைதானத்திற்கு போகிற வழியில் நாம் நடந்து கொண்டிருந்தோம். எங்கிருந்தோ வந்த பாலா அண்ணை பியர் சகிதம் திடீரென்று எம்வழியில் வந்து நின்றார். „இன்று வொலிவோல் விளையாடின மாதிரித்தான்" நாதன் முணுமுணுத்தது என் காதில் விழுந்தது. பாலா அண்ணைக்கு பரம சந்தோசம், இவ்வளவு பேர் ஒன்றாக தன்னிடம் அகப்பட்டதில்.........

„என்னடா கண்டறியாத வொலிவோல்? விட்டு விட்டு வாருங்கோடா ரூமிற்கு போய் கதைத்துக் கொண்டிருக்கலாம்."

„போங்கோ அண்ணை, இப்ப நாங்கள் வந்திடுறம்" இவ்வாறு நாதன் கூறும்போது அவனின் மனதிற்குள் பாலா அண்ணையிடம் தப்பிவிடலாம் என்றொரு நப்பாசை இருந்திருக்க வேண்டும். ஆனால் பாலா அண்ணை அசைந்து கொடுப்பதாயில்லை. நாதனின் கெஞ்சல் கொஞ்சம் கொஞ்சமாக ஏமாற்றங் கலந்த ஆத்திரமாக மாறுவதனை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. நாதனின் கோபம் கூடக்கூடக் பாலா அண்ணையின் குசி அதிகரிக்க ஆரம்பித்தது. அவர் இரண்டு கைகளிலும் வொலிவோலுடன் நின்ற நாதனின் சேர்ட்டை எட்டிப்பிடித்துக் கொண்டு „இப்ப எப்படி வியைாடப்போகிறாய் என்று பார்ப்பம்" என்று கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

நாதனின் கோபம் உச்சஸ்தானத்திற்கு போயிருக்க வேண்டும்.

„அண்ணை! பகிடியில்லை முதலில் என்ரை சேர்ட்டை விடுங்கோ" பாலா அண்ணை நாதனின் உணர்வுகளை உணரக்கூடிய நிலையில் இல்லை.

„இப்ப விடாட்டி என்னை அடிச்சுப் போடுவியோ?" என்று கேட்டவாறு அவர் நாதனின் கன்னத்தில் செல்லமாக தட்ட முற்பட்டார். அவர் நிதானமற்று இருந்த தாலோ என்னவோ அந்த அடி சற்றுப் பலமாக அவனின் கன்னத்தில் விழுந்தது. அடுத்த கணம்! அவனின் வலதுகை அவரின் கன்னத்தில் பலமாக இறங்கியது. எதிர்பாராத விதமாக விழுந்த பலமான அடியினால் பாலாஅண்ணை நிலை குலைந்து – தட்டுத்தடுமாறி பின்னர் முகம் அடிபட குப்புற விழுந்தார்.

எல்லாம் நாம் பார்த்துக் கொண்டே யிருக்கும் போதே நடந்து முடிந்துவிட்டது. நாதனும் ஏனையவர்களும் விறைத்துப்போய் பேசாமல் பர்த்துக்கொண்டே இருந்தனர். நான் ஓடிச்சென்று அவரின் தலையைத் மெல்லத் தூக்கிப் பார்த்தபோது அவரின் உதடுகள் வெடித்து இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. நான் மெல்ல ஆசுவாசப்படு த்தி நிமிர்த்தி உட்காரவைக்க முனைந்தேன்.

அவர் ஏதோ சொல்ல வாயைத்திறந்தபோது இரத்தத்தால் நனைந்திருந்த அவரது முன்பற்களில் ஒன்று உடைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வாசற்கதவைத்திறந்துகொண்டு பாலா அண்ணையும் அந்த மொழிபெயர்ப்பாளரும் நானிருந்த அறைக்குள்ளே நுளைந்த போது என் நினைவுகளிலிருந்து நான் என்னை சுதாகரித்துக்கொண்டேன்.மௌனமாகவே வந்து என்னருகிலுள்ள கதிரையில் அமர்ந்திருந்த அவரிடம் கேட்டேன்.

'"என்னமாதிரி பாலா அண்ணை? வழக்கு முடிஞ்சுதோ?"

"வழக்கு முடிஞ்சுது. ஆனால் இன்னும் தீர்ப்புச் சொல்லவில்லை.நீதவானும் யூரிமாரும் கதைத்துப்போட்டு கொஞ்சநேரத்தில என்னைக்கூப்பி டறதாய் சொல்லியிருக்கனம்."

"எல்லாம் நல்லபடி நடக்கும் யோசியாதையுங்கோ எப்பிடி ஏதும் மடக்கல் கேள்விகள் கேட்டவங்களோ?"

"இல்லைத்தம்பி நான் எல்லாக்கேள்விகளுக்கும் நல்ல வடிவா மறுமொழி சொன்னனான். என்ர லோயரும் நான் நல்லாக் கதைச்சனான் எண்டுதான் சொன்னவர்."

"பேந்தென்ன யோசியாதையுங்கோ. கட்டாயம் உங்களுக்கு அக்செப்ற் கிடைக்கும்"

அதன்பின் பக்கத்தில் அமர்ந்திருந்த அந்த மொழிபெயர்ப்பாளருடன் பேச்சுக்கொடுத்தேன். பாலாஅண்ணையின் வைத்திய அத்தாட்சிப்பத்திரங் கள் எல்லாம் அங்கு சமர்ப்பிக்கப்பட்டதா? என்றுகேட்டு உறுதிப்படுத்திக்கொண்டேன். அன்றைய சம்பவத்தின்பின் பாலாஅண்ணை பலவைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்ப்படுத்பட்டார். அந்தப்பரிசோதனைகளின் முடிவுகளின்படி அவரது ஈரல் கவலைப்படக்கூடியஅளவுக்கு பாதிக்கப்பட்டி ருக்கிறது என்றும் அத்துடன் அவர் உளவியல்ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதா கவும் கண்டுபிடிக்கப் பட்டது.அதனை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட வைத்திய அத்தாட்சி ப் பத்திரங்களை அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு அகதி அந்தஸ்த்துக் கிடைக்க வாய்ப்பு உண்டென எங்கள் செஞ்சிலுவைச்சங்க உத்தியோகத்தர்கள் ஏற்கனவே கூறியிருக்கிறார்கள்.

ஏறக்குறைய அரைமணித்தியாலத்தின் பின்னர் பாலா அண்ணையின் வழக்கறிஞர் பாலா அண்ணையையும் அவரது மொழிபெயர்ப்பாளரையும் மீண்டும் வந்து அழைத்துச்சென்றார். ஏதோ தூக்கு மேடைக்குச்செல்லும் ஒரு குற்றவாளிபோல் பாலாஅண்ணை பயந்து பயந்து போவதனை பார்க்க எனக்கு தாங்கமுடியாத வேதனையாக இருந்தது.

இன்னும் எத்தனை வருடங்களுக்கு ஈழத்தமிழர்களின் தலைவிதி அன்னியமொழிபேசும் மனிதர்களினால் தீர்மானிக்கப் படப்போகிறது. சோகங்களாலும் சோதனைகளாலும் சுற்றிவளைக்கப்பட்ட ஒருமனிதன்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மனித சமுதாயத்திடம் புகலிடம்கோரும்போது அங்கு வழக்குகளுக்கும் விசாரணைகளுக்கும் என்னதான் அவசியம் இருக்கிறது?
எங்கேயோ இடம்பெற்ற அரசியல் அழுத்தங்கள் பற்றி இவர்கள்விசாரித்து புகலிடம் வழங்குவதா? இல்லையா? என்று தீர்மானிப்பது என்பது; பார்வை அற்றவன் ஒருவன் மலர்களின் நிறங்களைப்பற்றி வியாக்கியானம் செய்வதைப்போலவே இருக்கும்.

"ஹலோ! இங்கை ஒருக்கால் ஓடிவாரும்." என்றகுரல்கேட்டு திரும்பிப்பார்க்கிறேன்.
அங்கு பாலா அண்ணையின் மொழிபெயர்ப்பாளர் அறையின் கதவைத்திறந்துகொண்டு பரபரப்பாக உள்ளே நுழைந்தார்.
"அங்கே பாலசுப்பிரமணியம் மயங்கி விழுந்துவிட்டார். நான் அம்புலன்சுக்கு ரெலிபோன் அடிச்சிட்டுத்தான் வாறன்."
எனக்கு வாயடைத்து வார்த்தைகள் வெளிவரவில்லை.
நான் எழுந்து விறுவிறு என்று பக்கத்துக் கதிரையில் வைக்கப்பட்டிருந்த பாலாஅண்ணையின் பத்திரங்களையும் ஆவணங்களையும் அவரது தோள் பைக்குள் அடைத்துவிட்டு பையுடன் மொழிபெயர்ப்பாளரைத் தொடர்ந்து பாலாஅணணை இருக்கும் அறையைநோக்கி ஓடினேன்.

முற்றும்.

## தலைமுடி.

நூற்றி நாற்பது
குரோணுக்கு,
வெட்டுவித்தது.
நிலத்தில்:
அஞ்சாறு..
தலையில்:
அஞ்சாறு..
பத்து வரியமா
அகதிச்
சீவியம்.

—சண்ஞமாடி.

## அந்திவந்த சந்திப்பு

ஜே.விமல்

நீராடைபோர்த்தி வானில்
நீந்திவரும் நிலவசைய
வெண்சங்குபோல் வண்ண
முகிற்கூட்டம் பவனிவர
பூவுலகைப் பார்த்துநிற்கும்
பொன் அல்லிப்பூக்கள் கொண்டு
நந்நீர்க்குளத்தில் தாமரைகள்
தாம்சிரிக்கும் வேளைகண்டு
தாவுலவி வருமந்தப் பொன்னந்திப்
பொழுதன்று.....
செவ்விள-நீர்ப்பதம் கொண்ட
தேனுமிழும் வண்டொன்று
தான்வந்த வழிதனிலே மாமலர்
பூத்தேடி நின்றவேளையிலே....

விண்ணுலகத் தாரகையின் எழில்
தனையும் தோற்கடிக்கும் தேவதையோ
மண்ணுலகில் வந்துநின்ற மாயமென்ன?
சிலைவண்ண மேனிகண்ட~
என்உள்ளம்
கதைசொல்லக் காத்திருக்க நேரமில்லை...
எண்ணம் எங்கோ சிறகடிக்கக்

கவி பின்னும் விழியுடையாள்
தானறியா நயமுடனே எழுதி
நின்றாள் என்மனதில்
காதல் மகத்துவத்தை.



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

குறுநாவல் - தொடர்

10

பங்குனிமாத வெய்யில் காலை 10 மணிக்கே உசாராகிவிட்டிருந்தது.
வெய்யிலின் கொடுமையை தணித்துக் கொள்ள அம்மனைவேண்டி விசேட பூசைகளும்,கிரிகைகளும் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் நடைபெறுவது வழக்கம்.
இம்மாதத்தின் வாரமுதல்நாளான திங்கட்கிழமைகளில் மக்கள் பெருந்திரளாகக்கூடி வழிபடுவர். இத்தகைய நாட்களில் கிராமத்துவிவசாயிகள் வருடமழைநாட்கள் பொய்க்காதிருக்க அம்பாளிடம் வேண்டுதல் செய்வதும்,வெப்பக்கொடுமையால் விளையும் கொடுநோய்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டியும் வேண்டுதல்களும் அதற்கான நிறைவேற்றங்களும் இடம்பெறும்.

இன்று பங்குனிமாத கடைசித்திங்கள்.அதிகாலையே எழுந்து வீடுவளவு சுத்தம்செய்து தலைமுழுகி ஈரத்தலையிலிருந்து நீர் சொட்டச்சொட்ட தனது வெள்ளைச்சேலையை உடுத்துக்கொண்டாள் பொன்மணி.
நெற்றியில் திருநீற்றுப்பட்டை ஈரத்தோடு பரவியிருந்தது.சுவரில் கௌவீனத்தோடு நிற்கும் முருகனைநோக்கி கையெடுத்தாள் அவள்.தனது கணவனின் மரணத்தோடு மனம்நொய்ந்துபோன அவளின் கண்கள் குழிவிழுந்து கறுத்துக்கிடந்தன. எலும்பை தள்ளிக்கொண்டு தெரியும்அவளது மேற்சட்டை அளவற்று தொழதொழத்துக் கிடந்தது. முருகனிடம் மன்றாட்டங்கள்தான் அவள் வைக்கும் காணிக்கைகளாக என்றும் இருக்கும். டனிஷா வந்ததிலிருந்து அவளுக்காகவும் அவளை தனது ஒரேஒரு மகனான அர்ச்சுனக்கு திருமணம் செய்து வைக்கும் அவளது ஆவலுக்கு அந்த முருகன்தான் துணையிருக்கவேண்டுமென்பதில் காலைமாலை முருகனிடம் கையேந்தும்போது மனமுருக வேண்டுதல்செய்வாள் அவள்.

இன்று மிக அதிகமாகவே முருகனிடம் மன்றாடினாள். ஏனெனில் நேற்று மாலை டனிஷாவின் பெற்றோர் பொன்மணியிடம் வந்து "அர்ச்சுனனைத்தவிர வேறு யாருக்கும் டனிஷாவை திருமணம் செய்துவைக்கமுடியாதென்றும்,கல்யாணவயதை அவள் இன்னமும் அடையாவிட்டாலும் வைத்தியர் திரவியத்தின் அபிப்பிராயப்படி அவளுக்குப்பிடித்துள்ள மனநோய்க்கு அன்பும் ஆதரவும் பொறுப்பும் தரவல்லதாக திருமணமும், அதேவேளை அவளின் புலன்கள் வேறுதிசையில் சிந்திக்கும் கட்டாயம் ஏற்படும்போது மனநிலை திருந்துவதற்கும் இடமுண்டு என்றும் அவளது மனதிலுள்ள வாழ்வின் நம்பிக்கையின்மைக்கு மருந்தாகவும் இந்ததிருமணம் அவசியமானதும் தற்போதைய கட்டாயமுமாகும்" என்று கூறி அர்ச்சுனனுக்கு திருமணம்செய்யக் கேட்ட சம்பவத்தை பொன்மணி அர்ச்சுனனிடம் கூறியபோது
அவன் ஒன்றுமே பேசாது இருந்ததையும், டனிஷாவின் பெற்றோருக்கு என்னபதில் சொல்வதென்ற அந்தரஉணர்விலும் எல்லாத்துன்பங்களையும் சேர்த்து முருகனிடம் மன்றாடி முடித்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



அவள் கணவனை இழந்ததன்பின் இதுவரை அம்மன்கோவிலுக்கு போகாதிருந்தாள்.
சரி அம்மனையும் கடைசித்தடவையாக மன்றாடிவிடுவது என்ற நம்பிக்கையோடு இன்று காலை தலைமுழுகி கோவிலுக்குச் சென்றுவரப் புறப்பட்டுவிட்டாள்.

∴∴

கன்றின் அழைப்புக்கு குரல்கொடுக்கும் தாய்ப்பசுவின் குரலில் அழுந்திக்கிடந்த சோகத்தை புரிந்தவனாக அர்ச்சுனன் அந்த இளங்கன்றை அவிழ்த்துவிட்டான்.
அது தாய்ப்பசுவோடு அணைந்துகொண்டது.
வேலியைக்கடந்து டனிஷாவின் அசைவு தெரியவே என்னசெய்கிறாள் அவள் என்று அவதானித்தான்.
கரிபோட்டுத்தனது பற்களை அசுரவேகத்தில் தீட்டிக் கொண்டிருந்த டனிஷா காறி உமிழ்ந்து சிலுப்பிப் பூத்திருந்த அந்த நந்தியாவட்டம் பூக்களில் தனது கரிஎச்சிலைத் துப்பினாள் டனிஷா.
பூக்கள் கரிதெளித்து அசிங்கமாகின.
தன்து கவனத்தை அங்கிருந்து திருப்பியபோதுதான் முற்றத்தில் நாமுத்தன் பொஞ்சாதி நின்றாள்.
"கொம்மா கோயிலுக்குப் போட்டுதோ தம்பி?
என்ற அவளிடம்
ஓமோம் இப்பதான் பூக்களும்புடுங்கிக்கொண்டு வெளிக்கிட்டவ......"என்ற அர்ச்சுனன்:
"என்னண உன்ர எரிஞ்சவீட்டை தனிச்சுநிண்டு திரும்பவும் மேஞ்சு குடிபோட்டியாம்....உப்பிடித்தா னண மனிசர் இருக்கவேணும்.
யானை கட்டின அரியாத்தை என்று கதையில மட்டும் படிக்கக்கூடாது. வாழ்ந்து காட்டவேணும்." என்று தொடர்ந்த அர்ச்சுனனிடம்" நீ சொல்லுறாய் தம்பி ஆனால் ஊர் என்ன சொல்லிச்சிரிக்குதாம் தெரியுமோ"........என்று தனது கூரிய முகத்தின் நாடியை தோளில் இடித்துக்கொண்ட அவளிடம்......
"என்ன ஆண்மூச்சுக்காரி...அதுதான் விதவை என்று சொல்லுங்கள். நீ அவயளிட்டைப் போய் கையேந்தியிருந்தியேண்டால்தான் நீ அடக்கமான பெண். உப்பிடித்தான எங்களோட விடுதலை இயக்கத்தில சேர்ந்திருந்த பெண்பிள்ளைகளை யார் கலியாணம் செய்தினம்.அதுகள ஒதுக்கி தனிச்சாதியாய் வைச்சுக்கொண்டு சுதந்திரத்தை மட்டும் அனுபவிக்கினம்.
இந்த ஊர் எல்லாம் சொல்லும்.என்று ஒருவித எரிச்சலுணர்வுடன் பேசினான் அர்ச்சுனன்.
நாமுத்தன் பொஞ்சாதி கடப்பைத்தாண்டினாள்.
கோவில் ஆயத்தமணி காற்றில் வந்தது.

∴∴

மத்தியான வெய்யிலில் கோவில் புழுதியின் சூட்டை தாங்கமாட்டாது பக்தர்கள் மண்டபங்களுக்குள் ஓடினர்.தண்ணீர்ப்பந்தல்களிலிருந்து சப்தங்களும் கோவில்வீதிகளில் அங்கங்கே இருந்த சிறுகடைகளுமாக சனங்கள் அங்குமிங்கும் திரிந்தனர்.
அந்தப்பெரிய ஆலயமணி அசைந்து அசைந்து கணீர் கணீர் என ஒலித்தது. கோவில் மண்டபங்களுக்குள் எரியும் கற்பூரவாசனை அச்சூழலெங்கணும் பரவியிருந்தது.
கோவிலின் கிழக்குவாசலில் வளர்த்த தீக்கிடங்கினுள் நெருப்புத்தணல்கள் சிவந்து தகதகத்துக்கொண்டிருந்தன. டனிஷாவின் தகப்பனார் தோளில் காவடியோடு தீயில் இறங்க ஆயத்தமாக இருந்தார். மக்கள் தீக்கிடங்கைச்சுற்றி வட்டமிட்டிருந்தனர். கோவில் பூசகர்



படிப்பகம்

www.padippakam.com

தண்ணீர்ச்செம்புடன்வந்து தீக்கிடங்கைச்சுற்றி பூசை செய்துவிட்டதோடு சனங்களின் அரோகராக் கோசத்தோடு தீயில் இறங்கினார் நவத்தார்.
பறை எழுந்து முழங்கியது. உருஆட்டத்திற்கு அடிக்கும் பறையின் ஒலிமுழங்க மூன்றுதடவை தீக்கிடங்கைக் கடந்த நவா கோவில் மண்டபத்துள் ஓடினார்.
"அம்மாளே என்ர புள்ளையை காப்பாற்று" என்று அவரது வாய் முணுமுணுக்க கண்ணீர் சொரிய அக் கோவில் மண்டபத்தில் தோப்புக்கரணங்கள் போட்டார் நவத்தார். அருகில் டனிஷாவின் தாயார் கண்ணீர் மல்கியபடி நின்றாள்.இருகைகளையும் குறுக்காகப் பிணைத்து காதுகளை மாறிப்பிடித்தபடி நிலம்நோக்கித் தாழ்ந்து பின் எழுந்து தோப்புக்கரணம் போட்டுக்கொண்டிருக்கும் நவத்தாரை சனம் புதினம் பார்த்தது.

∴∴

ஒரு குழந்தை தகப்பனாரைக் கேட்டதாம்." நான் உனது பிள்ளை எனில் உனக்குத் தெரிந்த எல்லாமே எனக்கும் தெரிந்திருக்கவேண்டும்" என்று.
ஆனால் டனிஷாவின் நிலையில் பெற்றோருக்குத் தெரிந்த எல்லாமே அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அத்துடன் சூழல் ஆதிக்கத்துள் தனித்துப்போன டனிஷாவின் மனநிலைக் குழப்பங்களுக்கும் அவளது பெற்றோரே குற்றவாளியாகினர்.
மாவோலைக் காற்றும் தென்னோலைச் சரசரப்பும் நிலவில் மினுங்கும் முற்றத்து மணலில் எல்லோரும் கூடியிருந்தனர். ஏதோ திருமணப்பேச்சு விவகாரம்போல சந்தோசமாக இருந்தனர்.தினமும் காலையில் ஒலிபரப்பப்படும் "தமிழே! தமிழே! என்ற வானொலிப் பாட்டை டனிஷா பாடினாள். முகம் விறைத்துக்கிடந்தது.அவளது தோழில் கிளி டனிஷ் மொழியில் வணக்கம் சொல்லிக்கொண்டிருந்தது.
பொன்மணிதான் கதையைத்தொடங்கினாள்.
"அர்ச்சுனன் கலியாணத்துக்கு ஒமெண்டிட்டால் அவளுக்கு இனி எல்லாம் சுகமாகிப்போடும். தமிழ்வாத்தியார் ஒருவரையும் அர்ச்சுனன் கேட்டவனாம்.அவரும் படிப்பிக்க ஓமென்றிருக்கிறாராம்." சொல்லிமுடித்த மகிழ்ச்சியில் புன்னகைத்தாள் பொன்மணி. முகிலுக்குள் ஒழித்திருந்த நிலா நீலவானில் எழுந்தது.

முற்றிற்று - யாவும் கற்பனை

சஞ்சலங்கள்......த.சேகர்......டென்ஸ்......................



காலை எழுந்துவிட்டால்
மாலைவரை மயக்கம்தான்.
சோலைதனில் குயில் பாடுமா? என்று
பாலைவனத்தில் செடிகள் முளைப்பதுபோல்
சோலைதனில் இளம்குயில்கள் பாடிவிடும்.
காற்று சில்லென்று வீசிவிட்டால் – அது
கடுங்கோபம் கொண்டுவிடும்.
மாற்றொலிகள் கேட்டுவிட்டால் – அது
சீற்றம் கொண்டு எழுந்துவிடும்.
சேற்றுநீரைக்கண்டுவிட்டால் – அது
தன்முகத்திரையை மூடிவிடும்.
இயற்கைகளை எதிர்க்கின்ற அந்த
இளம்குயிலை
வழக்கமாக என்னசெய்யவேண்டுமென்று
வாலிபர்க்குத்தெரிந்துவிடும்.
நேற்றுவரை பாடாதிருந்த அந்த
இளம்குயிலை
இன்றுதான் பாடவைத்தேன்.
குயிலின் ஓசைகேட்டு
மயிலொன்று ஆடியது.
மயிலின் ஆட்டத்தால் – என்
மனதில் சஞ்சலங்கள்.
மயில் ஒன்று குயில் ஒன்று.
மனதைக் கவர்ந்துவிட்டால்
துயில்கொள்ளமுடியாது
விழியின் ஓரத்தில்
விழுந்துவிடாது ஒட்டிநிற்கும்
வண்ணமயிலை வாவென்று அழைப்பதா?
காதுக்கு இசைதந்து – எனை
காத்திருக்கும்
கானக்குயிலை
போவென்று சொல்வதா?
வாவென்று சொல்வதும்
போவென்று சொல்வதும்
வார்த்தையில் இல்லை.
வாழ்க்கையில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அறிதிறன் காணல் போட்டி இல: யாவ-4


## பொருத்திக்காண்பது என்ன?

1. கீழே சீரற்று குழம்பிப்போயுள்ள ஒரு படத்தின் துண்டங்களை வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்.
2. வெட்டி எடுத்த துண்டங்களை நீங்கள் சரியாகப் பொருத்தி எடுக்கும்போது அங்கு ஒரு காட்சியை காண்பீர்கள்.
3. நீங்கள் காணும் அக்காட்சியைப்பற்றி 15 வரிகளுக்கு மேற்படாமல் விபரக்குறிப்பொன்றை எழுதி உங்கள் பெயர்,முகவரி,வயது என்பனவற்றை குறித்து "Kakam" Baunehøjen 35 3320 Skævinge Denmark. என்ற முகவரிக்கு 20.11.95ற்கு பிந்தாமல் அனுப்புங்கள்

போட்டி விதிகள்

1. யாரும் பங்குகொள்ளலாம்
2. சரியாக பொருத்தப்பட்ட படமும், அத்துடன் அப்படத்தைப் பற்றி எழுதப்படுகின்ற விபரக்குறிப்பின் சிறப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டு போட்டியில் ஒருவர் தெரிவுசெய்யப்படுவார்.
3. தெரிவுசெய்யப்படும் நபரின் பெயர் விபரங்களும், அவரால் எழுத்ப்படும் படத்திற்கான விபரக்குறிப்பும் அடுத்த மாத காகத்தில் வெளியிடப்படுவதோடு: சிறந்த தமிழ்நூலொன்றும் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

........................காகம்........................





படிப்பகம்

www.padippakam.com



காகம் இதழ் 11 ல் வெளியான "பொருத்திக் காண்பதென்ன" இல. ஊ – 3 ற்கான போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு காகத்தின் நன்றிகள்.

எல்லோருமே நல்ல விளக்கங்களை எழுதியிருந் தார்கள்.மகிழ்ச்சி.

இந்தமுறை தெரிவான வாசகர்:திருமதி மாலா துரைசிங்கம் நோர்வே.

அவர் எழுதி அனுப்பிய படவிளக்கம்

..........................................................................................

இது ஒரு இந்துக்கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் ஒரு காட்சியாகும்.

இந்துக்கள் கடவுளின்மேல் தமது குறைகளை முன்வைத்து பரிககாரம் தேடும் நம்பிக்கையுள்ளவர்கள். அத்துடன் தாம்தேடும் விடையங்கள் சுபிட்சமாகும்போது கடவுளுக்கான நேர்த்தியை தமது வேண்டுதலின்படி நிறைவேற்றி மகிழ்வர். அத்தகைய வேண்டுகோளை நிறைவேற்றி மனத்திருப்தியடையும் ஒரு இந்துப்பெண்ணின் காட்சியையே நான் இங்கு காண்கின்றேன்.

திருமதி மாலா துரைசிங்கம் நோர்வே


காகம்

முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்
எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.
–
ஒரு தாய்

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 12 – மார்கழி 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200
டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு.ரவி .TlF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு.செல்வன் TlF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் : ஓவியர் திரு சிவநாதன்


சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு
படைப்பாளிகளே
முழுப்பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்களை
படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.
........................காகம்........................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad. (0900 KHC) " -51033

Til: Thevan
Dyssegården 5,2,tv
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்